# கைத்தொழில் அமைச்சு

## உலக பொதிசெய்தல் அமைப்பினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பொதி செய்தல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ்பத்திர பயிற்சிக் கற்கைநெறி – 2024

கைத்தொழில் அமைச்சு இலங்கை பொதிசெய்தல் நிறுவனத்துடன் (Sri Lanka Institute of Packaging) இணைந்து பொதிசெய்தல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்காக நடாத்தப்படும் வார இறுதி பயிற்சிக் கற்கை நெறியைக் கற்பதற்காக பொதிசெய்தல் கைத்தொழில் துறையில் பணியாற்றும் பின்வரும் தகைமைகள் சகிதம் தொழில்நுட்ப மட்டத்தில் சிரேஷ்ட பணியாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தகைமைகள்:**

க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது விஞ்ஞானம், விவசாயம் மற்றும் கணிதம் போன்ற பாடங்களில் ஒன்று உட்பட 03 திறமைச் சித்திகள் சகிதம் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியுடன் பொதி செய்தல் துறையை தொழிலாக தெரிவு செய்வதற்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என்பதுடன் தற்போது பொதிசெய்தல் துறையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு (குறைந்தபட்சம் 02 வருட கால அனுபவம்) முகாமையாளர்கள், நிறைவேற்றுத்தர பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், தரக் கட்டுப்பாட்டு பணியாளர்கள், கொள்வனவு பணியாளர்கள், சந்தைப்படுத்தல் பணியாளர்கள் மற்றும் பொதிசெய்தல் துறையில் அல்லது பொதிசெய்தலை பயன்படுத்தும் நிறுவனங்களின் இயந்திர இயக்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மொழி மூலம்** : ஆங்கிலம் மற்றும் சிங்களம்

**கற்கை நெறியின் உள்ளடக்கம் :**

பொதிசெய்தல் துறையின் நோக்கங்கள்/ பொதிசெய்தல் மற்றும் உற்பத்தித்திறன்/ தர முகாமைத்துவம் சகிதம் பொதிசெய்தல்/ பொலிமர் தொழில்நுட்பம்/ பொதிசெய்தல் பரிசீலனை/ பொதிசெய்தல் பயன்பாடுகள்/ பொதிசெய்தல் செயற்பாடுகள்/ பொருளாதார பொதிசெய்தல்/ பொதிசெய்தல் சந்தைப்படுத்தல்/ பொதிசெய்தலின் போது ஏற்படும் சூழல் மற்றும் சுகாதார தாக்கம்/ பொதிசெய்தல் தொடர்பான தரநிலைகள்/ பசுமை பொதிசெய்தல்/ தர்மோ பிளாஸ்டிக் செயற்பாடுகள்/ நெகிழ்வான பொதிசெய்தல்/ கனமான பொதிசெய்தல்/ காகிதங்கள், கொருகேடட், நாரிழை பொதிசெய்தல்/ மரப் பெட்டி, கண்ணாடி மற்றும் உலோக பொதிசெய்தல் மற்றும் பொதிசெய்தல் தொடர்பான தொழிற்சாலை கண்காணிப்பு விஜயங்கள் என்பன உள்ளடங்கும்.

**இடம் :** கொழும்பைச் சுற்றியுள்ள வசதியான இடத்தில்.

**கால எல்லை :** 2024 ஆகஸ்ட் மாதம் 03ஆம் திகதி முதல் (04 தொழிற்சாலை கண்காணிப்பு விஜயங்கள் உட்பட 14 சனிக்கிழமை நாட்களில் இடம்பெறும்)

**கற்கை நெறிக் கட்டணம் பங்கு பற்றும் ஒருவருக்கு 120,000.00 ரூபா**

சிறிய மற்றும் மத்திம அளவிலான கைத்தொழில் (SMEs) அபேட்சகர்களுக்கு கற்கை நெறியின் மொத்தச் செலவின் 50% (கற்கை நெறிப் பொருட்கள் உட்பட) கைத்தொழில் அமைச்சினால் நிதியுதவி வழங்கப்படும். விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் மொத்தச் செலவின் 50% மிகுதித் தொகையை பணியாளர் ஏற்றுக்கொள்வதாக விண்ணப்பத்தில் சான்றளித்தல் வேண்டும். பாரிய அளவிலான கைத்தொழில் விண்ணப்பதாரர்கள் கற்கை நெறியில் பங்குபற்றுவதானால் முழுக் கற்கை நெறிக் கட்டணத்தையும் செலுத்துதல் வேண்டும். (பங்குபற்றுபவர்களின் அதிகூடிய எண்ணிக்கை 25 நபர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது)

**விண்ணப்பப் படிவம் :**

பின்வரும் ஞசு குறியீடு அல்லது கூகுல் லிங்க் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024 ஜூலை 15ஆம் திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு :**


தொலைபேசி இல. 011-2422319
தொலைநகல் இல. 011-2432750
மின்னஞ்சல்: sector1mid@yahoo.com
இணையதளம்: www.industry.gov.lk/

**செயலாளர்,**
**கைத்தொழில் அமைச்சு,**
**73/1, காலி வீதி, கொழும்பு.**


QR Code
Google link: https://shorturl.at/8wi05